<u>பயிற்சிகள்.</u>

வணக்கம் மாணவர்களே,

பாடப் புத்தகத்தில் பக்கம் **167** இல் காணப்படும் வலிமிகா இடங்களை அறிதல். தொடர்ந்து, பக்கம் **168** இல் காணப்படும் இடுபணி ஒன்றையும் இடுபணி மூன்றையும் மற்றும் வளப்படுத்துதல், குறைநீக்கல் பயிற்சிகளைச் செய்யவும். உங்கள் விடைகளை எழுதி தொலைவரியில் அனுப்புதல். அதோடு, இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) திங்கள் இரவு **7** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

பாடம் 4 இலக்கணம்

வலிமிகா இடங்களை அறிக.

சொற்றொடர்களில்,
வருமொழி
'க், ச், த், ப்'
ஆகிய வல்லெழுத்துகளில்
தொடங்கினால் நிலைமொழி
ஈற்றில் சில இடங்களில்
வலிமிகாது.

உயர்திணைப் பெயர், பொதுப்பெயர்களின்
பின் வலிமிகாது.

எ.கா:

தம்பி + சிறியவன் = தம்பி சிறியவன்
பறவை + பறந்தது = பறவை பறந்தது

## இயற்கையின் எழில் கோலம்

கடலும் அலையும் சோலைகளும்
காற்றும் மலையும் ஆறுகளும்
இடியும் மழையும் எல்லாமே
இயற்கைத் தாயின் எழிற் கோலம்

வனத்தில் உலவும் விலங்குகளும்
வானில் பறக்கும் பறவைகளும்
மனத்தில் நிறையும் பூச்சிகளும்
மணக்கும் இயற்கை எழிற் கோலம்

மண்ணில் மலரும் பூவினமும்
மயக்கும் தந்திரும் வண்டினமும்
விண்ணில் நகரும் வெளிர் நிலவும்
விந்தை இயற்கை எழிற் கோலம்

வலிமிகா இடங்கள்:
பொதுப்பெயர் பின் வலிமிகாது

மூலம்: கவிஞர் மின்னூர் சீனிவாசன்
எடுத்தாளப்பட்டது.



5.5.5 உயர்திணைப் பெயர், பொதுப்பெயர் ஆகியவற்றின்பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**இடுபணி 1**

வாசித்தறிந்த கவிதையில் காணும் பொதுப்பெயர்களைப் பட்டியலிடுக.

**இடுபணி 2**

பொதுப்பெயர்கள் தொடர்பான இலக்கண விளக்கத்தைப் பட்டியலுடன் ஒப்பிட்டு அறிக.



**கவனத்தில் கொள்க**

**பொதுப்பெயர் என்றால் என்ன?**

- ஒரே வகையான பல பொருள்களுக்குப் பொதுவான பெயராக விளங்குவது பொதுப்பெயர்.

எ.கா:

| பொதுப்பெயர் | |
|---|---|
| விலங்கு | ஊர் |
| மரம் | மலை |
| பூ | கடல் |
| பறவை | மீன் |

**இடுபணி 3**

பொதுப்பெயர்களின் பின் வலிமிகாது எனும் விதிக்கேற்பச் சேர்த்து எழுதுக.

1. ஊர் + கூடியது = ஊர் கூடியது
2. கடல் + பொங்கியது =
3. உணவு + சுவைத்தது =
4. மலை + தெரிந்தது =
5. விண்மீன் + சிமிட்டியது =
6. விலங்கு + சிக்கியது =

## வளப்படுத்துதல்

**பொதுப்பெயர்களுக்குப் பின் வலிமிகாது எனும் விதிக்கேற்பச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**

இயற்கையை விட்டு நாம் வெகு தூரம் விலகி வந்துவிட்டோம். காலையில் கதிர் தோன்றும் அழகைக் கண்டு வெகு நாளாகிவிட்டது. பூங்காவில், மலர் பூத்துக் குலுங்கும் அழகில் மனத்தை இழந்த நாள்கள் மலை ஏறிவிட்டன. பறவை பாடும் அழகு, இரவு நேரத்தில் தவளை கத்தும் சத்தம், வண்டு பாடும் இனிய ரீங்காரம், ஆறு சலசலத்து ஓடும் எழில் தோற்றம், அருவி கீழே வீழும் அருங்காட்சி, எல்லாம் கானல் நீராய்க் களம் பெயர்ந்து விட்டன. முன்னேற்றம் எனும் போர்வையில், மனிதன் இயற்கையை அழிப்பதால், காடு கண்ணில் படாமல் போய்விடுகிறது. புதிதாய் ஊர் பிறந்து விடுகிறது. அங்கே வாழ்ந்த விலங்கு போய் மறைந்த நிலை பற்றி யாரும் வினவுவதில்லை. மலை கரைத்து, மாடிவீடு கட்டுகிறோம். அங்கே தழைத்திருந்த மரங்களையும் செடிகொடி செழித்திருந்த செழுமையையும் இனி, எங்கே தேடப் போகிறோம்? இயற்கை வளங்களைச் சுரண்டி எடுத்துவிட்டு, மனிதவளத்தை மேம்படுத்துகிறோம் என்று மனிதனே கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.



## குறைநீக்கல்

கீழ்க்காணும் சொற்களுக்குச் சரியான இணையைத் தெரிவு செய்து பொதுப்பெயர்களின் பின் வலிமிகாது என்ற விதிக்கேற்பச் சேர்த்து எழுதுக.

| | |
|---|---|
| கொடி | பழுத்தது |
| பழம் | சாய்ந்தது |
| மரம் | சீறியது |
| மலர் | பறந்தது |
| பாம்பு | பூத்தது |

தொகுதி 16